கொண்டு இருக்கின்றன. ஒன்று, கல்வியை ஒரு தொழிலாகக் கருதுகின்ற ஒரு மனப்பான்மை அல்லது எண்ண ஓட்டம் கடந்த 10, 15 ஆண்டுகளில் மிக வேகமாக உருவாகி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும், இதுபோன்று பொறியியல் தொடர்பான பாலி டெக்னிக் போன்ற அமைப்புகளிலும் இடம் பெற்றுள்ளது. ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிலேயிருந்து நிதி பெறலாம், பெறுகிற நிதியைக் கொண்டு கல்லூரியை வளர்ப்பதாகவும் காட்டலாம், மிச்சமும் படுத்தலாம் என்ற நோக்கத்தோடு பல அமைப்புகள் தாங்களாகவே உருவாகிவிட்டன. அவை எல்லாம் அரசாங்கத்தினுடைய அனுமதி இல்லாமல் நடத்த முடியாது என்ற ஒரு கட்டாயமான நிலைமையைச் செயல்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையும் நீடிக்கிறது. என்ன காரணம் என்றால், சில அமைப்புகள் சிறுபான்மையோர் என்ற உரிமையை வைத்துக் கொண்டு, நீதிமன்றத்திலே வாதாடுகிறார்கள். இந்தச் சிறு பான்மை என்ற வாதம் பெரும்பான்மைக்குப் பெரிய தொல்லை யாக இருக்கிறது என்பதையும், சிறுபான்மை என்ற பெயரால் சில முறைகேடுகள் நடைபெறுவதற்கு அரசியல் சட்டத்திலே இருக்கிற சில உரிமைகளை அவர்கள் பயன்படுத்திக்கொள் கிறார்கள் என்பதையும், இந்த அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். சிறுபான்மையோராக இருந் தாலும், யாராக இருந்தாலும் ஒரு கல்வி நிலையத்தை ஏற்படுத்து கிறபோது, அரசினுடைய விதிமுறைகளோடு ஒத்து, இசைந்து முறைப்படி நடத்தவேண்டும் என்று ஒரு கட்டாயமான நிலைமை இருந்தால் தவிர, கட்டுப்படுத்துவது சற்றுக் கடினமாகும்.

செய்யாறு தாலுகாவை செங்கை அண்ணா மாவட்டத்தோடு இணைத்தல்

*3565 திரு. வ. அன்பழகன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) செய்யாறு தாலுகாவை செங்கை அண்ணா மாவட்டத் தோடு இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இணைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.